# நம்முடைய அடையாளம் யார்?

# Who is Our Identity?

நம்முடைய அடையாளம், அச்சாணி ஆணிவேர் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. இறை இயேசுவில் பிரியமுள்ள சகோதர சகோதிரிகளே! இன்றைய வார்த்தை வழிபாடு நாம் யாருடைய அடையாளமாக திகழ்கிறோம் என்பதை சிந்திக்க அழைப்புவிடுக்கிறது.

இத்தாலி நாட்டில் ஒரு பிரதிபெற்ற வழக்கறிஞரின் மகனாக பிறந்த உலக நாட்டங்களில் ஈடுபட்டு தன்னுடைய 26 வது வயதில் தன்னுடைய அடையாளம், அச்சானி, ஆணிவேர் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து என்று உணர்ந்த அவர் தானாகவே தன்னுடைய ஆன்மீக வாழ்வை துவங்கிறார் புனித பிலிப்பு நேரி தொடக்கத்திலே ஜெபத்திலும், தவத்திலும், படிப்பிலும் சிறந்த தன்னை ஒரு கடவுளின் கருவியாகவே செதுக்கி கொள்கிறார். அது மட்டுமல்லாமல் திருப்பயணம் மேற்கொள்வது, இரவு முழுவதும் ஜெபிப்பது, நோயாளிகளை மருத்துவமணையிலே சந்திப்பதே வழக்கமாக கொண்டிருந்தார். இவருடைய இத்தகைய செயல்களை பார்த்த பலரும் இவருடன் பழக, உரையாட ஆசைப்பட்டனர். தான் இயேசுவை அடையாளப்படுத்திக் கொண்டது போல தன்னுடன் இருப்பவர்களும் இயேசுவை அடையாளமாக மாற்றிக்கொள்ள அவர்களுக்காக மாதந்தோறும் தன்னுடைய ஆன்மீக தந்தையின் துணையோடு நற்கருணை ஆசிர்வாதத்தை பெற செய்கிறார். இவருடைய இந்த ஆன்மீக தந்தை இவரை குருவாக மாற்றுகிறார். குருவாகிய பின் ஆன்மீக முதிர்ச்சியடைகிறார். இவருடைய திருப்பலிகளும் ஒப்புரவு அருட்சாதனமும் பல கர்தினார்கள், குருக்கள் மற்றும் புனிதர்களுடைய கவனத்தை ஈர்ந்தது. குறிப்பாக புனித லெயோலா இஞ்ஞாசியாரும் மற்றும் புனித சார்லஸ் பொரோமியோவும் இதற்கு சான்று. இது போன்று நம் ஆண்டவர் இயேசு கிற்ஸ்துவை அடையாளமாக கொள்கிற ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் இந்த புனிதரை போல் பிராகாசம் பெறும்.

## நாம் கண்முடிதனமாக பின்பற்றுகின்ற அடையாளங்கள்

**சாதி:** கிறிஸ்துவர்களாக இருப்பினும் நாம் முதலில் நம்மை அடையாளப்படுத்திப் பெருமைக்கொள்வது சாதியின் அடிப்படையிலே தான். இதற்கு யாருமே விதிவிளக்கல்ல. இது மிகப் பெரிய சவாலாகவும் பலருக்கு கேள்விக்குறியாகவும் இருப்பினும் நம்முடைய இருப்பும் இருத்தலும் இதை மையப்படுத்தியே அமைகிறது.

**பணம்:** இன்றைக்கு ஒருவருடைய வாழ்க்கையை நியமிக்கின்ற மிகப் பெரும் சக்தியாகவும் ஆட்டிப்படைக்கக்கூடிய மோசமான காரணியாகவும் பணம் விளங்குகிறது. இன்றளவும் பணத்திற்காக பல புண்ணியங்களை பெற்றுத் தரும் காரியங்களையும் நன்னடத்தையையும் நாம் இழக்க அச்சப்படுவதில்லை.

**ஆடம்பரம்:** இன்றைக்கு ஆடம்பரங்கள் நம்மிடையே அடையாளங்களாக மாறி நம்முடைய வாழ்க்கையை அலங்கோலப்படுத்திக் கொண்டிருக்கின்றன. பொருளற்ற விழாக்களும், கேளிக்கைகளும் நாம் வீண் ஆடம்பரம் செய்வதற்கான காரணங்களாக இருந்தாலும் இவற்றின் மோகம் நம்மை விட்டபாடில்லை.

**பதவி:** நம்மில் பலர் நமது பெயரைக் கொண்டு அறிமுகபடுத்திக் கொள்வதை விட தமது பதவியை வைத்து நம்மை முதன்மைப்படுத்தும்போது அதிலே ஆனந்தமும், பெருமையும், அகங்காரமும் கொள்கிறோம். பதவியை நம்முடைய அடையாளமாகக் கொண்டு வாழ்வதிலே வாழ்க்கையின் பாதியை இழந்துவிடுவது மட்டுமல்லாமல் பல்வேறு சண்டை சச்சரவுகளுக்கும் மனித மாண்பு இல்லாமல் செயல்படும் கருவியாகவும் மாறிவிடுகிறோம்.

## இயேசுவை அடையாளமாக கொண்டால் வரும் நன்மைகள்

**நிலை வாழ்வு:**

“வழியும் உண்மையும் வாழ்வு நானே. என் வழியாய் அன்றி யாரும் தந்தையிடம் வருவதில்லை.” நிலைவாழ்வின் உறுப்பினர்களாக நம்மை ஏற்படுத்தி கொள்வதற்க்கான வழியை இயேசு நமக்கு வழங்கி, நம் வாழ்வில்

எற்பட்டுள்ள தடுமாற்றங்களை போக்கும் நிலைவாழ்வுக்கான வழியை செம்மைபடுத்துவார்.

**உரிமை வாழ்வு:**

“இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும் அடிமைகள் என்றும் உரிமை குடிமக்கள் என்றும் இல்லை. ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை. கிற்ஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் ஒன்றாய் இருக்கிறீர்கள்” என்ற இறை வசனம் வலியுறுத்துவது போல எந்த வித பாகுபாடுமின்றி உரிமை வாழ்வை பெற்று இறை மகிழ்ச்சியுடன் இயேசுவின் சீடர்களாகும் தகுதியை பெறுவோம்.

**நல்வாழ்வு :**

“நான் ஆடுகள் வாழ்வு பெரும் பொருட்டு அதுவும் நிறைவாக பெறும் பொருட்டு வந்துள்ளேன்.” கிறிஸ்துவை அடையாளமாகக் கொண்ட நம் ஒவ்வொருவருடைய வாழ்வும் மகிழ்ச்சி நிறைந்த, மனநிம்மதியுள்ள, மனநிறைவை கொண்டு வாழ்கிற வாழ்க்கையாக மாறும் என்பதிலே எந்த ஒரு ஐயப்பாடும் இல்லை. எனவே அன்பிற்குரியவர்களே. நம்முடைய அடையாளம் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. ஒரு நாளும் மறவாமல் கிறிஸ்துவை மையப்படுத்ததி நம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்வோம். ஆமென்